[5th March 1968

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தக் காலத்து நெடுஞ்செழியன் அவசரப்பட்டு தவறு செய்த காரணத்தால் அவன் செங்கோல் வளைந்தது. ஆனால் அவன் விட்ட உயிர், வளைந்த செங்கோலை நிமிர்த்துவிட்டுச் சென்றது. ஆகையால் அவசரப்பட்டு செய்த தன் காரணமாக அப்படி நடந்தது என்பது இந்த நெடுஞ்செழியனுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும். இந்த நெடுஞ்செழியன் எதையும் அவசரப் பட்டுச் செய்யமாட்டான்.

திரு. கே. ராமதாஸ் : மவுண்ட் ரோடில் உள்ள முதலமைச்சர் சிலை மறைக்கப்பட்டிருக்கிறதே என் ? அதை மாற்றப் போகிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மறைத்திருப்பதற்குக் காரணம் அந்த இடத்தில் இப்போது சிலையில்லை. அது அகற்றப்பட்டுவிட்டு அங்கே வெண்கலச் சிலை வைப்பதற்காகத்தான் அது மறைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என் வி. நடராசன் : தலைவர் அவர்களே, கோயில்களில் உள்ள பிள்ளையார் சிலைகள் ஒரு இடத்தில் ஒரு மாதிரியாகவும், இன்னோர் இடத்தில் வேறு விதமாகவும் மாறுபட்டு இருக்கின்றன. அச்சிலைகளை ஒரு சீராக அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நடராஜர் சிலைகூட பல கோணங்களில் பல மாதிரி கோவில்களில் இருக்கின்றன.

திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் : வள்ளுவர் மனைவி வாசுகிக்கு சிலை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வள்ளுவர் மனைவி வாசுகியா என்பது ஆராய்ச்சிக்கு உரியதாக இருக்கிறது. வள்ளுவருக்கு மனைவி உண்டா இல்லையா என்று புலவர்கள் கூடி ஒரு சீரான முடிவு எடுத்துச் சொன்னால் அது பற்றி முடிவெடுக்கப்படும்.

மிஸ்டர் சேர்மன் : காந்தியை மறந்துவிட்டு எங்கோ கனம் உறுப்பினர்கள் போகிறார்கள்.

திரு. எம். எத்திராஜலு : வள்ளுவர் குறளை எழுதுவதற்கு அவருடைய மனைவிதான் காரணமாக இருந்தார் என்று சொல்லுகிறார்கள். அப்படிப் பட்ட வாசுகிக்குச் சிலை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வள்ளுவர் இல்லறத்தைப்பற்றி எழுதியிருப்பதால் மனைவி உண்டு என்று தெரிகிறது. ஆனால் அந்த மனைவி வாசுகியா என்பது ஆராய்ச்சிக்கு உரியதாக இருந்து வருகிறது.

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்ணகியின் சிலை பல புலவர்களைக் கலந்து அமைக்கப்பட்டது என்று சொன்னார்கள். கண்ணகி தெய்வீக நிலை எய்தியது சேர நாட்டில்தான். ஆகையால் அந்த நிலையில் சிலை வைத்தால் ஏற்றதாக இருக்கும். அரசாங்கம் அதை மறு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒரு கதாபாத்திரத்தின் சிலைதான் அது. கதையில் பல நிலைகள் உண்டு. காந்தியார் சிலைகூட பல இடங்களில் பல விதமாக, சில உட்கார்ந்து இருப்பதைப்போலவும், சில தக்ளியில் நூற்றுக் கொண்டிருப்பதாகவும், சில ராட்டையில் நூல் நூற்பது போலவும் இருக்கும். அதைப்போல கண்ணகியின் சிலை இப்படிப்பட்ட நிலைகளில் ஒன்றாக இருக்கிறது.

Beautification of Marina

* 175 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any scheme under the consideration of the Madras Government to beautify the Marina Beach ; and

(*b*) whether there is any proposal to remove the huts in the Marina area ?

5th March 1968]

மெரினு கடற்கரையை அழகுபடுத்தல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மெரினு கடற்கரையை அழகுபடுத்த சர்க்காரிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(இ) மெரினு கடற்கரைப் பகுதியில் உள்ள குடிசைகளை அப்புறப் படுத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : (அ) ஆம்.

(இ) மெரினு கடற்கரைப பகுதியில் உள்ள குடிசைகள் சமீபத்தில் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, மெரினு கடற்கரையை அழகுபடுத்த என்ன திட்டம் உள்ளது ? அதைப்பற்றி சபையில் விவர அறிக்கை வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : தலைவரவர்களே, இதற்காக ஏறத்தாழ ரூ. 76,67,000 ரூபாயில் ஒரு திட்டம் தீட்டப்பட்டது. அதன்படி மெரினு கடற்கரை நெடுக, ஆழமற்ற கிணறுகளை வெட்டவும், தோட்டக்கண்காணிப்பாளரது பதவியைத் தரம் உயர்த்தவும், காற்று வீசும் காலத்தில் கடற்கரையிலிருந்து மணல் காற்றில் அடித்து வரப்படுவதைத் தடுக்கவும், மெரினு கடற்கரை நெடுக கார்கள் ஓட்டப்படும் வழியை ஒரு சீராக 100 அடி அகல முள்ளதாகச் செய்யவும், மெரினுவிலுள்ள படகு கட்டும் தளத்தை வேறு இடத்திற்கு மாற்றவும், பல வடிவங்களில் கவர்ச்சிகரமான முறையில் மூன்றடுக்கு மலர்ப்படுகைகளை அமைக்கவும். இக்குழு ஆலோசனை வழங்கியது. இதில் நம்முடைய தலைவர் அவர்களுக்கும் அதிக அக்கறை உண்டு. ஆனுல் இந்தத் திட்டத்தின்படி ரூபாய் அதிகமாக இருக்கிற காரணத்தால் இப்போது அந்தத் திட்டத்தை மேற்கொள்வது ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தினசரி நடந்து செல்லும் காதலர் பாதையைத் திருத்தி அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : வயதான காலத்தில் தலைவரவர்கள் அது பற்றி அக்கறை காட்டுவாரா என்று தெரியவில்லை.

திரு. கே. ராமதாஸ் : தலைவரவர்களே, நம்முடைய கடற்கரை அமைப்பு இயற்கையாக இருக்கவேண்டுமென்றும், மராமத்து செய்யவேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனுல் கடற்கரையில் விளக்குகள் இயற்கைக்கு விரோதமாகக் காட்சி அளிக்கின்றன. ஆகவே விளக்குகளை அகற்றி வேறு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : தலைவரவர்களே, அந்தக் கடற்கரை நடுவிலே இருக்கிற விளக்குகள் தேவையென்கிற அளவில்தான் போட்டப் பட்டு இருக்கின்றன. அதனுல் பயமற்ற முறையில் அங்குபோய் உட்கார்ந்து உல்லாசத்தை அனுபவிக்க முடிகிறது. விளக்கு, நண்பருக்கு இடையூருக இருந்தால், விளக்குகள் இல்லாத பக்கத்திற்குச் செல்லலாம்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : Sir, will the Government provide alternative places for the boatmen to repair their boats ? They put up their thatched sheds right in the middle of the beach where people go and sit, and repair their boats, and leave them in the night there, causing obstruction and ugliness.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : படகுகளை எல்லாம் விரைவில் அகற்றப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

[5th March 1968

THIRUMATHI S. MANJUBHASHINI : Sir, seeing thatso many people frequent the beach nowadays, and the sands are in a very dirty con lition, will Government take steps to put up dustbins and clean up the entire beach ? Thousands of people go to the beach every day, and they eat a lot of edibles and throw the leaves and waste paper all over the sands.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது அதிகமாக மக்கள் போவதால் மாத்திரமல்ல. அங்கு குடிசைகள் அதிகமாக போடப்பட்டிருந்த காரணத்தால் அந்த கடற்கரை வெண்மணல் களங்கப்படுத்தப்பட்டுப்போனது உண்மைதான். அதைத் தூய்மைப்படுத்தும் வகையில் இந்த அரசு தன்னாலான காரியங்களை மேற்கொள்ளும்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, கடற்கரையை அழகு படுத்தும் திட்டத்திற்கு பெரும் தொகை வேண்டியிருக்கிறது. பொருளாதார நிலைமை குறித்து உடனடியாக மேற்கொள்ளவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மற்றவைகளைப் பின்னால் வைத்துக் கொண்டாலும், இந்தப் படகு கட்டும் தளத்தை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்றவேண்டும். இப்போது இன்னும் பல குடிசைகள், மீன் பிடிப்பவர்கள் சாமான்கள் அங்கிருக்கின்றன. அவர்களுக்கு வேறு ஏற்பாடு செய்துவிட்டு அதைக் காலி செய்வதற்கு அப்படி ஒன்றும் செலவு அதிகமாக ஆகாது. அந்த ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்ய முற்படுவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : படகு கட்டுத் துறையை வேறு இடத்திற்கு மாற்றும் முயற்சிகள் தீவிரமான நிலைமையில் இருக்கின்றன. குடிசைகளைப் பற்றி எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது குறித்து எல்லா கட்சி தலைவர்களும் ஒத்துழைக்கவேண்டும். சில குடிசைகளைப் பிரிக்கும் நிலை ஏற்பட்டபோது, " அதை உடனே படங்களாக எடுத்து, ஐயோ, குடிசைகளை பிரித்துவிட்டார்களே " என்ற சூழ்நிலைகளை உருவாக்கிய காரணத்தால்தான், அதில் கை வைக்க அச்சமாக இருக்கிறது. இருந்தாலும் இந்தக் குடிசை வகையில் அவர்களுக்கு மாற்று இடங்கள் தந்து, சமாதானம் செய்து, அந்த கடற்கரை குடிசைகள் பிரிக்கப்பட்டது. அப்படிப் பட்ட மாற்று இடங்களை ஏற்றுக்கொள்வதில் இன்றையதினம் அவர்கள் வம்பு செய்து கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் கடற்கரையைப் பொறுத்தவரையில் கொஞ்சம் திடமான முடிவோடு குடிசைகளை அகற்றுவதில் இந்த அரசு தீவிர கவனம் செலுத்தும்.

திரு. கே. ராஜாராம் : இப்போது எடுத்திருக்கும் நடவடிக்கைகள் உண்மையில் பாராட்ட வேண்டிய நடவடிக்கைகளாகும். குடிசைகள் எல்லாவற்றையும் எடுத்துவிட்டார்கள். இப்போது இல்லை. ஆனால் அவர்கள் சாமான்கள் வைத்துக் கொண்டிருப்பதாக சிறுசிறு குடிசைகள் போட்டு வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதற்கு வேறு ஏற்பாடு அவர்களுக்கு செய்து கொடுத்துவிட்டு அந்த சிறு குடிசைகளையும் அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவைகள் குடியிருக்கும் குடிசைகள் அல்லவாதலால், அவர்களை வெளியேற்ற வேண்டிய அவசியமில்லை. இனிமேல் புதிதாகக் குடிசைகளை போடக் கூடாதென்று போலீஸ் கமிஷனர் அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். இதே மாதிரி நடவடிக்கைகளை மேற்கொண்டு கொஞ்சம் கறாராக எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதே மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதுபற்றி குறிப்பிட்ட பிறகு, மறுநாளே போலீஸ் கமிஷனர் அவர்களையும், மற்ற அதிகாரிகளையும் கலந்து தக்க நடவடிக்கை எடுக்கும்படி சொல்லியிருக்கிறேன். அதன்படி போலீஸ் கமிஷனர் புதிதாக கட்டப்படுகிற குடிசைகளைக் கட்டப்படாமல் தடுகக நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.